2016 பிப்ரவரி 20]

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், திருப்பூர் தெற்கு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், பொள்ளாச்சி by–pass road, பல்லடத்தில் தற்பொழுது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. சொந்தக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான நிலம், மாவட்ட நிருவாகத்தின்மூலம், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

103—

மாணவர் விடுதி

***48104—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, கடியாபட்டியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

திருமயம் தொகுதி, கடியாபட்டியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.*

திரு. பி.கே. வைரமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது வாழ்க்கையில் புனிதம் காக்கும் பொன்னேட்டு சரித்திரமாம் எங்கள் அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) வாழும் தாயே, வளர்தமிழ் பூமி வணங்கும் தெய்வமாம் எங்கள் அம்மா, இமை துஞ்சாது உழைத்து, இயலார்க்கு ஏற்றங்கள் கொடுத்து, இந்தியாவின் முதல் மாநிலமாகத் தமிழகத்தை உயர்த்திய எங்கள் அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) ஈகைக்கும், வாகைக்கும் இலக்கணமாய்த் திகழ்கின்ற நம் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் 2016–ல் மட்டுமல்ல (மேசையைத் தட்டும் ஒலி) 2021–லும் தமிழகத்தை ஆள வேண்டும் என்பதுதான் மக்களின் விருப்பம், அதுவே சரித்திரத்தின் விருப்பமும் என்று சொல்லி, நான் நித்தம், நித்தம் வணங்கி மகிழும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது வணக்கத்தையும், நன்றியையும் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்ந்த ஞானத்தால் அன்னைத் தமிழகத்தை அண்ணாந்து பார்க்கும்வண்ணம் உயர்த்திக் காட்டிய ஆற்றலரசி எங்கள் அம்மா, 2016–ல் மீண்டும் மலர இருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில் கடியாபட்டி, இராமசந்திரபுரம், உலகப்பர் மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் அதிகம் பயில்வதால், கழக நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைத்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள பகுதியில், விடுதியில் தங்கிப் பயிலும்

2016 பிப்ரவரி 20]

மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்பட்சத்தில், இனிவருங்காலங்களில் புதிய விடுதிகள் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, ஆய்வு செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

104—

ஆரம்ப சுகாதார நிலையம்

***38095—திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, குப்பநந்தம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித பாதங்களை பணிவோடு வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) செங்கம் தொகுதி, குப்பநந்தம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.